Registered as a News Paper　பக்கங்கள் 04　விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM　Peoples Daily　மக்கள் தினசரி

நாதம் 03　திருவள்ளுவர் ஆண்டு 2023　ஆவணி 06　(22 - 08 - 1992)　சனிக்கிழமை　ஓசை 186

## பரீட்சை நிலையங்கள் இடமாற்றம் பற்றி அறிவிப்பு

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்தில் தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையினால் மேற்படி பரீட்சை மண்டபங்கள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளன. புதிய பரீட்சை மண்டபங்கள் எவை என்பதை அறிந்து கொள்வதற்காக, பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களைக்கொண்ட பாடசாலை அதிபர்களும், அப்பரீட்சைக்குக் கடமையாற்றவுள்ள பரீட்சை மேற்பார்வையாளர்களும் (இன்று) சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு பண்டத்தரிப்பு கல்விக்கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. எஸ். வி. மகேசவேல் அவர்களை யா/வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் தவறாது சந்தித்து உரிய விபரங்களைப் (4 ஆம் பக்கம் பார்க்க)

(குடாநாட்டு யுத்தம்: இரண்டாம் நாள்)

# சீன டாங்கிகளுடன் இராணுவம் நகர்வு

# பண்டத்தரிப்பு எல்லையில் கடும் சண்டை

## உணவு இறக்கும் வேலை மீண்டும் ஆரம்பம்

குமாரி கப்பலில் இருந்து உணவுப் பொருள்கள் இறக்கும் வேலைகள் நேற்றுக் காலை முதல் மீண்டும் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பருத்தித் துறை துறைமுகத்தில் உணவுப் பொருள்களை இறக்கிக் கொண்டிருந்த கப்பலை கடற் படையினர் காங்கேசன் துறைக்கு செல்லுமாறு பணித் ததையடுத்து நண்பகலுடன் கப்பல் காங்கேசன்துறைக்கு சென்றது.

பின்னர் உணவுப் பொருள்கள் இறக்க அனுமதி வழங்கியதையடுத்து நேற்றுக்காலை பருத்தித்துறை துறைமுகத்திற்கு வந்த கப்பலில் இருந்து உணவுப்பொருள்கள் இறக்கப் பட்டு வருகிறது (82)

திறந்த பல்கலை மாணவருக்கும்

## மகாபொல புலமைப் பரிசில் வழங்க தீர்மானம்

(கொழும்பு)

மகாப்பொல உயர்கல்வி புலமைப் பரிசில்கள், திறந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் ஒவ்வொரு வருடமும், திறந்த பல்கலைக் கழகத்தில் கல்வி கற்கும் தகுதியுள்ள 400 மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கப் படும் என்றும்,

திறந்த பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் தயானந்த விஜயசேகர தெரிவித்த யோசனையின் பேரில் திறந்த பல்கலைக் கழக மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்குவதற்கு மகாப்பொல உயர் கல்வி நம்பிக்கை நிதியத்தின் நம்பிக்கையாளர் சபை அனுமதி வழங்கியது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

ஏனைய புலமைப் பரிசில்களைப் போல பத்து சதவீத (4 ஆம் பக்கம் பார்க்க)

வேவு விமானம்

## நோட்டம்

(உருநகர்)

நேற்று (21-8-92) நண்பகல் 1 மணியளவில் சீ-பிளேன் ஒன்று அளவெட்டி, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, சண்டிலிப்பாய், விளான், மாதகல், சில்லாலைப் பகுதிகளுக்கு மேலாகப் பறந்து நோட்டமிட்டது.

அதேவேளை 1-15 மணியளவில் பலாலி இராணுவ முகாமில் இருந்து வந்த உலங்குவானூர்தி சண்டிலிப்பாய், கந்தரோடை, மாகியப்பிட்டிப் பகுதிகளை நோக்கிக் கலிபர் வேட்டுகளைத் தீர்த்தது

இரு பொம்மர் விமானங்களும் நண்பகல் மேற்படி பகுதிகளுக்கு மேலாகப் பலதடவை வட்டமிட்டபோதும் குண்டு வீச்சுகளை நடத்தாமல் திரும்பின. (21)

## குடாநாட்டை அதிரவைத்த அகோர எறிகணை வீச்சு

(நமது நிருபர்)

மாதகல் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவம் நேற்றுக் காலை முதல் ...

...கும் பாரிய சத்தத்துடன் வீழ்ந்து வெடித்தன

[4 ஆம் பக்கம் பார்க்க]

## இராணுவத்திற்கு பலத்த இழப்பு மாதகலில் படைகள் தரிப்பு

[யாழ்ப்பாணம்]

சிறிலங்கா இராணுவம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீதான தாக்குதல் ஆரம்பித்து இரண்டாவது நாளான நேற்று பண்டத்தரிப்பின் எல்லைப் பகுதியிலும், மாதகல் பகுதியிலும் கடும் மோதல்கள் இடம் பெற்றன. இளவாலை, மாரீசன் கூடல், சிறுவிளான் பகுதியில் இருந்து சீனத்தயாரிப்பு டாங்கிகள் சகிதம் இராணுவம் பண்டத்தரிப்பு, மாதகல் நோக்கி முன்னேற முயன்றபோதே இந்த மோதல்கள் இடம்பெற்றன. நேற்று அதிகாலையில் இருந்து மதியம் வரை இடம்பெற்ற உக்கிரச் சண்டையில் இராணுவத் தரப்பில் பலத்த உயிர்ச்சேதம் ஏற் பட்டது.

புலிகள் தரப்பில் நான்கு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

நேற்று முன்தினம் முகாமில் இருந்துவெளியேறி இளவாலை சிறுவிளான், மாரீசங்கூடல் பகுதியில் தரித்துநின்ற இராணுவத்தினர், நேற்று அதி காலை மாதகல் நோக்கியும், பண்டத்தரிப்பு நோக்கியும் நகர முற்பட்டபோது விடுதலைப் புலிகள் கடும் எதிர்த்தாக்குதலை நடத்தினர்.

இதைத்தொடர்ந்துபண்டத் தரிப்பு நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்தினரின் முயற்சி புலிகளால் முறியடிக்கப்பட்டது. இதேவேளை, சிறுவிளான், மாரீசங்கூடல் பகுதியில் இருந்த இராணுவத்தினர் மாதகல் நோக்கி நகரத் தொடங்கினர். இதைத் தொடர்ந்து இராணுவத்தினருக்கும் - புலிகளுக்கும் இடையில் பலமணிநேரமாகமோதல் (4 ஆம் பக்கம் பார்க்க)

## பண்டத்தரிப்பு பிடிப்பதும் படையினர் இலக்காம்

(கொழும்பு)

தெல்லிப்பழையில் பூமியதிர்ச்சி என்ற பெயரிலான இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும், விமானப்படையின் உதவியோடு மேற்கு நோக்கிப் படையினர்முன்னேறியுள்ளதாகவும் (4 ஆம் பக்கம் பார்க்க)

படும் என்றும், திறந்த பல்கலைக்கழக உப களைப் போல பத்து சதவீத

(4 ஆம் பக்கம் பார்க்க)

கொண்டுள்ள சிறிலங்கா இராணுவம் நேற்றுக் காலை முதல் நண்பகல் வரை மக்கள் குடியிருப்புகளை நோக்கிப் பல நவீன எறிகணை கொண்டு தாக்கின.

இவ் எறிகணைகள் புதிய வகை ஒலியை எழுப்பிக் கொண்டு புகை கக்கியவாறு குடாநாட்டையே அதிரவைக்

[4 ஆம் பக்கம் பார்க்க]

பிக்கப்பட்டிருப்பதாகவும்,

# இரத்மலானை கொள்ளை ஜே.வி.பி.யினரின் கைவரிசை

இரத்மலானை ரயில்வே ஊழியரின் சம்பளப் பணமான ஐந்து லட்சப் ரூபா கொள்ளையிடப்பட்ட சம்பவத்தில் ஜே.வி.பி. யினரே ஈடுபட்டதாக பொலிசார் கூறியுள்ளனர்.

பொலிசார் இதுபற்றி மேலும் கூறுகையில் இச் சம்பவத்தோடு தொடர்புடைய சிலர் கைதுசெய்யப்பட்டிருப்பதுடன் கொள்ளையிடப்பட்ட பணத்தின் ஒரு பகுதி மீட்கப்பட்டு இருப்பதாகவும் குறிப்பிட்டனர். அத்துடன், இந்தியாவில் தற்போது தங்கியிருக்கும் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசேகராவின் பணிப்பின் பேரிலேயே இச் சம்பவம் நடத்தப்பட்டதாகவும் கூறியுள்ளனர்.

# மண்ணெய் அனுமதிக்க மோட்டார் சைக்கிள் லஞ்சம்

(கொழும்பு)

வடபகுதிக்கான மண்ணெண்ணெய் விநியோகத்திற்காக மோட்டார் சைக்கிள் ஒன்றை லஞ்சமாகப் பெற்றுக் கொண்டதான குற்றச் சாட்டின் கீழ் அநுராதபுரம் மாவட்டப் பெற்றோலிய கூட்டுத்தாபனப் பிராந்திய முகாமையாளர் ஒருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

14,500 ரூபா பெறுமதியான மோட்டார் சைக்கிளை லஞ்சமாகப் பெற்றுக் கொண்ட இவர், வடபகுதிக்கு மண்ணெண்ணெய் கொண்டு செல்வதற்கு அனுமதியளித்ததாக தெரிவிக்கப்படுகிறது,

# விமானப்படை அனர்த்தம்

(நமது நிருபர்)

வலிகாமம் மேற்குப்பகுதி நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்திற்கு உதவியாக மாதகல் பகுதியில் சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் நேற்றும் அகோரக் குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

கடற்கரையை அண்டிய மாதகல், பொன்னாலை, நெல்லியான், திருவடிநிழல் பகுதிகளிலும் காலையும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# நான்கு புலிகள் வீரச்சாவு

மாதகல் பகுதியில் நேற்று இடம்பெற்ற பெரும் மோதலில் நான்கு விடுதலைப் புலிகள் போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

2-ம் லெப்டினன்ட் அண்ணா நம்பி (கண்ணலிங்கம் கயிலைநாதன், மாவிட்டபுரம்) வீரவேங்கை நேசன் (கார்த்திகேசு சிவநாதன் வரணி வடக்கு மாசரி), வீரவேங்கை காந்தன் (வைரமுத்து சந்திரமோகன் 5 ஆம் குறிச்சி ஏறாவூர் மட்டக்களப்பு), வீரவேங்கை

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பல்லாயிரக்கணக்கான மக்கள் அகதிகளாக வெளியேற்றம்

(நமது நிருபர்)

வலிகாமம் வடக்கு மற்றும் மேற்கு பகுதிகளில் இருந்து கடந்த இரண்டு நாட்களில் ஒரு இலச்சத்திற்கு மேற்பட்ட மக்கள் வெளியேறி ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ளனர்.

முப்படைகளின் உதவியுடன் வலிகாமம் மேற்குப் பகுதியை நோக்கி முன்னேறும் இராணுவத்தினரை எதிர்த்து விடுதலைப் புலிகள் உக்கிர தாக்குதலை தொடுத்துள்ளனர். இத்தாக்குதல்களின் போது விமானப்படை விமானங்களும் கடற்படை பீரங்கிப் படகுகளும் இராணுவத்தினருக்கு உதவியாக மக்கள் வாழ்விடங்களை குறியாகக் கொண்டு கண்மூடித்தனமான தாக்குதல்களையும் எறிகணைத் தாக்குதல்களையும் மேற்கொண்ட வண்ணமுள்ளன.

இத்தாக்குதல்களுக்கு அஞ்சியே அளவெட்டி, இளவாலை மாரீசன்கூடல், மாதகல், பண்டத்தரிப்பு, சில்லாலை, வடலியடைப்பு, சுளிபுரம் பண்ணாகம், சங்கானை, தொட்டிலடி, விளான், மாகியப்பிட்டி, ஆகிய பகுதிகளில் இருந்தேமக்கள்வெளியேறியவண்ணமுள்ளனர். சைக்கில்கள், வண்டில்கள், லான்ட்மாஸ்ரர் ஆகியவற்றில் மக்கள் கையில் அகப்பட்டவற்றை எடுத்துக்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# நான்கு பொது மக்கள் காயம்

வலி வடக்கு-வலி மேற்குப் பகுதிகளில் நேற்று இடம் பெற்ற இராணுவ நடவடிக்கைகளில் மும்முனைத்தாக்குதலுக்கு நான்கு பொது மக்கள் படுகாயமடைந்தனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# வதந்தியின் விளைவு; குழந்தை உட்பட இருவர் பலி

(மல்லாகம்)

இராணுவம் மல்லாகம் பகுதியை அண்மித்துவிட்டதாக சில தீயசக்திகள் பரப்பிய வதந்தியால் இருவர் பரிதாபகரமான முறையில் உயிரிழந்ததுடன் ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளைவிட்டு வெளியேறி அவசர அவசரமாக சுன்னாகம்பகுதியைநோக்கி இடம் பெயர்ந்தனர்,

தெல்லிப்பழை பகுதியில் நிலைகொண்டிருந்தசிறிலங்கா இராணுவம் மக்கள்குடியிருப்புகள் ஊடாக மல்லாகம் பகுதிக்குள் நுழைந்துவிட்டதாகவே வதந்தி பரப்பப்பட்டது.

இதனைக் கேள்விப்பட்டதும் அவசர அவசரமாக கைக்குழந்தையையும் தூக்கிக்கொண்டு ஓடிய இள்ந்தாய் ஒருவர் வீதியில் தடக்கி வீழ்ந்ததால் குழந்தை அவ்விடத்திலேயே பரிதாபகரமானமுறையில்மரணத்தைத் தழுவிக்கொண்டது.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர்மீதான நடவடிக்கைகள் மொறீசியசிற்கு கவலை

## வெளியுறவு அமைச்சர் தெரிவிப்பு

[சென்னை]

இலங்கையில்தமிழர் மீதான நடவடிக்கைகள் எங்களுக்குக் கவலையைத் தருகின்றன. இப்பிரச்சினைத்தீர்வுக்கு மண்டலரீதியிலோ அல்லது வேறு வழியிலோ முயற்சித்தால் மொறீசியஸ் வரவேற்கும் என மொறீசியஸ் வெளியுறவுத் துறை அமைச்சர் றேமென்ற் பிரான்சியா தெரிவித்தார்.

இந்தியாவிற்கு விஜயம்செய்துள்ள அவர், சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இது குறித்துப் பேசுவதற்காக அவுஸ்ரேலியாவுக்கு நான் அடுத்தமாதம் செல்லவுள்ளேன் மேலும் சுவீடன், பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கும் நான் சென்று அங்குள்ள தலைவர்களுடன் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்துப் பேசுவேன். ஆனால், இலங்கைத் தமிழர் பிரச்சினை இலங்கையில் உள் நாட்டுப் பிரச்சினையாகஇருத்பதால் மொறீசியஸ் நேரடியாகத் தலையிடாது என்றார்.

ராஜீவ் படுகொலை, அதையடுத்து விடுதலைப் புலிகள் மீதான தடை ஆகியவை இலங்கைத் தமிழர் பிரச்சினை தீர்வுக்கு தடையாக இல்லை. ஆனால் அது தீர்வுக்கான வழிமுறைகளில் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது என அவர் தெரிவித்தார்.

ராஜீவ் கொலைக்கு இலங்கைத் தமிழர்கள் தான் பொறுப்புஎன்று கூறமுடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

# இடம் பெயர்ந்த மக்களுக்கு நிவாரணம் வழங்க ஏற்பாடு

[நமது நிருபர்]

இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து வரும் மக்களின் நலன்களை கவனிப்பதில் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஈடுபட்டுவருகிறது.

இம் மக்களுக்கு சுமார் ஆறு நாட்களுக்கான உலர் உணவுத் தேவையை உதவி அரசாங்க அதிபர் தலைமையிலான குழு மூலமும், அரசாங்க சார்பற்ற நிறுவனங்களின் இணையம் மூலமும் கவனிக்கவும் ஏற்பாடாகியுள்ளது.

தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து இடம் பெயரும் மக்களின் தேவையை அப்பகுதியிலுள்ள உதவி அரசாங்க அதிபர் தலைமையிலான குழு மேற்கொண்டு வருகின்றது.

இம் மக்களுக்காக சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர்

[4 ஆம் பக்கம் பார்க்க]

**குளம் திருத்தி வளம் பெறுவோம்**

## வரி விளம்பரம்

### மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்

மீரா வெளியீடு ''சிதம்பர திருச்செந்திநாதன்'' எழுதிய இந்த நாவல் . . . துன்பங்களும் சோதனைகளும் தொடர்ந்து வந்தபோதும் தளராத மன உறுதியுடன் இந்த மண்ணை நேசித்து மானமுடன் தலைநிமிர்ந்து வாழ முனையும் குடும்பத்தின் கதை. (3039)

### தையல் இயந்திரங்கள்

தையல் இயந்திரங்களை வாங்கவும், விற்கவும், பழுதடைந்த தையல் இயந்திரங்களை உங்கள் வீட்டிலேயே வைத்துத் திருத்தவும் உதிரிப் பாகங்களைப் பெற்றுக்கொள்ளவும்; தையல் இயந்திர விற்பனை நிலையம், கண்டி வீதி, சாவகச்சேரி. (3037)

### புத்தகக்கண்காட்சியில்

ஐந்து மீரா பிரசுரங்களை வாங்குபவர்களுக்கு 50 ரூபா பெறுமதியான ''மீண்டும் புதிதாய்ப் பிறப்போம்'' என்னும் புதிய நாவல் அன்பளிப்பாக வழங்கப்படுகிறதுஸ்ரீகாந் புத்தகசாலைநல்லூர் கோயில் முன்புறம் நல்லூர். (சி/4908)

### வாங்கலாம் விற்கலாம்

உங்கள் கடிகாரங்கள் பழையனவாகி விட்டனவா? அவற்றிற்கு நியாயவிலை போட்டு புதியன எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம் உதிரிப்பாகங்களுக்கான கடிகாரங்கள், றேடியோக்கள், மேசை மணிக்கூடுகள் வாங்கப்படும் டில்கா வாச் வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (3047)

### காணவில்லை

ராஜரட்ணம் என்பவரது புத்திரன் உதயன் என்பவரை சென்ற 6ஆம் தேதியிலிருந்து காணவில்லை இவர் நீலநிறக் காற்சட்டையும் சேட்டும் அணிந்திருந்தார். மூளை சுகமற்றவர். கை வழங்காதவர் வெள்ளை நிறம் உடையவர். கண்டவர்கள் 'அர்ச்சனா ஸ்டோர்ஸ்' கண்டி வீதி, சாவகச்சேரி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும் (3055)


### Hitachi Rechargable Battery

வீடியோ கமராவுக்குரிய Rechargable Battery 12 Volts )m-bp 22 நல்ல நிலையில் விற்பனைக்குண்டு டில்கா வாச்வேக்ஸ், 284 ஸ்ரான்லி வீதி (பழைய விகாரை முன்பாக) யாழ்ப்பாணம் (3061)

### காப்புறுதி வழங்க

## 45-ம் நாள் நினைவாக

வீர ஜனனம் 07 - 07 - 19/3



வீரச் சாவு 09 - 07 - 1992

கப்டன்

### ஈழவேந்தன் (சுப்ரா)

(பாலசுந்தரம் சதிஸ்) மயிலிட்டி வடக்கு

திதி: 22· 08· 92


மண்ணை மீட்கப் புறப்பட்ட மயிலையூர் மைந்தனே
மறவனாய் அண்ணன் வழியில் நின்றாயே
செந்தமிழ் ஈழம் செந்நீரில் நனைந்தாலும்
எதிரி நம் மண்ணில் கால் வைக்கக் கூடாது
என்று எழுந்தவனே!
கோட்டையிலே புலிவீரனாய்
கொடியபகைவரைவிரட்ட காரைநகரிலே கரிகாலனாய்
சேந்தாங் குளத்திலே செழுந்தமிழ் வீரனாய்
கட்டுவன் சந்தியிலே
ஆனையிறவு கட்டைக்காட்டிலே களவேங்கையாய்
சாதனைகள் புரிந்தவனே!
இயக்கச்சியிலே களத்திலே நீசாதனை படைக்கையிலே
இந்த மண்ணை நீ தழுவிக் கொண்டாயோ
எம்மாநமை மைந்தா
எம் நெஞ்சிலே பாரமில்லை சோகமில்லை
வெற்றிப் பெருமிதமே மிளிர்கிறது
வீரவேங்கை ஒன்றைப் பெற்றெடுத்ததற்கு
ஆண்டுகள் பல சென்றாலும்
நீ ஆற்றிய சாதனை மறையாது
நிச்சயம் தமிழ் ஈழம் அதை மறவாது.

அஞிங்கிலடி
அளவெட்டி வடக்கு.

குடும்பத்தினர், உறவினர்,
நண்பர்கள்.

(3034)

## 45-ம் நாள் நினைவாக...



அந்தியேட்டி அழைப்பிதழும்

## 45-ம்நாள் நினைவஞ்சலியும்



### வீரவேங்கை அறிவொளி

(தங்கலிங்கம் சிவகுகன்)

மண்ணில் 25-1-1970

விண்ணில் 9-07-1992

அளவையம்பதியின் அணையாச்சுடரே
அன்பு மகனே அறிவொளியே
அடிமை விலங்கை அறுத்தெறிய
வீறுகொண்ட வேங்கையானாய்
மலரும் தமிழீழங்காண துடி துடித்தாய்
கட்டைக்காட்டில் காவியநாயகனானாய்
தோன்றிற் புகழோடு தோன்றுக
என்ற வள்ளுவன் வாய் மொழிக்கு
இலக்காய்த் தமிழீழத்தில் தேசுடன் மிளிர்கின்றாய்

அறிவொளியின் அந்தியேட்டி இன்று ஆவணித்திங்கள் ஆறாம் நாள் (22-8-92) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால், அதில் பங்குபற்றிச் செல்லுமாறு சக போராளிகளையும் நண்பர்களையும், உறவினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மகாத்மா வீதி,
அளவெட்டி.

இங்ஙனம்
- அறிவொளி குடும்பத்தினர்

(சி/4922)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீர ஜனனம் 30 | 12 | 1971



வீரச்சாவு 22 | 08 | 1991

### வீரவேங்கை அமலன்

## 45-ம் நாள் நினைவஞ்சலியும்

அந்தியேட்டி அழைப்பிதழும்



அன்னை மடியில் 21-7 1974

மண்ணின் அடியில் 9-7-1992

### வீரவேங்கை சொக்கன் (சின்னா)

(கிறிஸ்ரி-ராஜ்மோகன்)

அன்னையவள் தமிழ் மண்ணில்
கை விலங்கை ஒடிக்க வென்று
சொக்கன் (சின்னா) என்னும் நாமமுடன்
களத்தினிலே அஞ்சா நெஞ்சுடன்
புறப்பட்டாய் மகனே!
எல்லோர் நெஞ்சிலும் அன்புத் தீபமாய்
வாழ்ந்த மோகா!
எம் தேசத்தைக் காத்திட போர்
களத்தில் பாய்ந்தாயடா!
இயக்கச்சி போரிலே புலியாக நின்று
அரக்கரைக் கொன்று எம் - தேசத்தையும்
எம்மையும் விட்டு நீங்கினையோ!
எம்மை யெல்லாம் அழ வைத்து விட்டு
சென்றனையே!
மோகா! உன் சிரித்த முகத்தை
எப்போ காண்போமடா!

அன்றைய தினம் வீரச்சாவையடைந்த ஏனைய போராளிகளுக்கும் எமது கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துகிறோம். 22. 8. 92 இன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைக்கு அனைவரையும் அழைக்கின்றோம்.

ஆலடிச்சந்தி,
நல்லூர் வடக்கு

உமது ஆத்மா சாந்திக்கு
பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்
[சி/4923]

## நினைவு கூருகின்றோம்...
## 1992 - 08 - 22

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட வேலணை மேற்கைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1989 ஆம் ஆண்டு மட்டக்களப்பு வட்டமடுப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**ரவி** (பொன்னையா விஜயராஜ் - சரஸ்வதி வித்தியாலய வீதி, தம்பிலுவில்-1, அம்பாறை)

திருக்கோணமலை மேன்காமம் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் நடேஸ்** (இ. திலகரத்தினம் - தம்பலகமம், திருக்கோணமலை)

ராஜரட்ணம் என்பவரது புத்திரன் உதயன் என்பவரை சென்ற 6ஆம் தேதியிலிருந்து காணவில்லை இவர் நீலநிறக் காற்சட்டையும் சேட்டும் அணிந்திருந்தார். மூளை சுகமற்றவர். கை வழங்காதவர் வெள்ளை நிறம் உடையவர். கண்டவர்கள் 'அர்ச்சனா ஸ்டோர்ஸ்' கண்டி வீதி, சாவகச்சேரி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும் (3055)

---

*Hitachi Rechargable Battery*

வீடியோ கமராவுக்குரிய Rechargable Battery 12 Volts )m-bp 22 நல்ல நிலையில் விற்பனைக்குண்டு டில்கா வாச்வேர்ஸ், 284 ஸ்ரான்லி வீதி (பழைய விகாரை முன்பாக) யாழ்ப்பாணம் (3061)

---

## காப்புறுதி வழங்க துரித நடவடிக்கை

(கொழும்பு)

ஊர்காவற்றுறையிலுள்ள அராலித் துறையில், விடுதலைப் புலிகளால் வைக்கப்பட்ட நிலக்கண்ணி வெடி விபத்தில் பலியான சிறிலங்கா ராணுவத்தைச் சேர்ந்த 10 உயர் அதிகாரிகளுக்குரிய காப்புறுதிப் பணத்தை கொடுக்கும் வேலைகளை துரிதமாக செய்வதற்கு காப்புறுதி கூட்டுத்தாபனம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## பேரூட் நிறுவனம் சீருடை உதவி

[பருத்தித்துறை]

வடமராட்சி கிழக்கில் உள்ள 10 அகதிகள் முகாம்களில் இருக்கும் சுமார் 800 மாணவர்களுக்கு வடமராட்சி பேரூட் நிறுவனம் பாடசாலைகளுக்கான சீருடைகளை வழங்கி வருகின்றது.

தற்போது 4அகதிகள் முகாம்களில் உள்ள சுமார் 300 மாணவர்களுக்குபாடசாலைச் சீருடைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆறு முகாம்களில் உள்ள சுமார் 500 மாணவர்களுக்கும் இப்பாடசாலைச் சீருடைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை பேரூட் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. (25)

## வரி அதிகரிக்க யுத்தமே காரணமாம்

(கொழும்பு)

''நாட்டில் யுத்தம், மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்காக அரசாங்கம் பெருந்தொகை செலவிட வேண்டியிருப்பதாலேயே உற்பத்தி மற்றும் ஏனைய வரியை அதிகரிக்க வேண்டி ஏற்பட்டது.''

இவ்வாறு கொள்கை திட்டமிடல் ராஜாங்க அமைச்சர் விமல் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

---

நிச்சயம் தமிழ் ஈழம் அதை மறவாது.

அணிஞ்கிலடி, அளவெட்டி வடக்கு. — குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள்.

(3034)

---

# 45-ம் நாள் நினைவாக...



## லெப். சேந்தன் (நிசார்)

(பரஞ்சோதி நிரஞ்சன்)

(1992-07-09 இல் இயக்கச்சியில நடைபெற்ற நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்டவர்)

| தாயக மண்ணில் | தாயக விடிவிற்காய் |
|---|---|
| 1973.12.15 | 1992.07.09 |

மாவீரர் இல்லத்தில்
துயில் கொள்ளும்,
எங்கள் தெய்வங்களே!
மழலைகளின் மகிழ்வை நினைத்து,
மகிழ்வான வாழ்வை மறந்து போனீர்
மண்ணின் விடிவிற்காய்
இருளுக்குள் நடந்தீர்
விடுதலை வேண்டும் என்றே,
வீழ்ந்து விட்டீர் இம்மண்ணில்.
காவலரண்களைக் காத்துக் காத்து
கண்ணயர மறந்த நீங்கள்
கண்மூடித்தூங்குகின்றீர்
காத்து நிற்பார் தோழர் என்று
தூங்குங்கள்! தூங்குங்கள்!
நிம்மதியாய் தூங்குங்கள்!
புதைகுழிகளின் மீது சபதமெடுத்து
புதிய உலகை நோக்கிய பயணம்
தொடரும் தொடரும் இது உறுதி.

அவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட சகபோராளிகளுக்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள் இன்று (22-08-1992) நடைபெறும் 45-ம் நாள் நினைவஞ்சலிக்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திக்கம் (3057) குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள்

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



| வீர ஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 30-12-1971 | 22-08-1991 |

## வீரவேங்கை அமலன்

(தம்பிராசா சிவகணேஸ்)

அந்நியச் சுவடுகளை அழித்திட
அக்கினியாக எழுந்தவனே!
ஆகாயம் கடல்வெளிப் போர்தனில்
ஆவியினை அர்ப்பணித்துச் சென்றவனே!
நிதர்சனத்தில் நேர்த்தியாகப் பணிபுரிந்து
நெஞ்சத்தில் நீங்காதிடம் கொண்டவனே!
வானொலியில் தொழில் நுட்பத்திறமையினால்
வியத்தகு சாதனைகள் புரிந்தவனே!
இடர்மிகுந்த வேளையிலும் உந்தன் ஈழ
இலட்சியத்தை நாம் சுமந்து நிற்கின்றோம்!

திருநெல்வேலி. - நிதர்சன நண்பர்கள்

(3059)

---

அழியாத

# 45ஆம் நாள் நினைவில்...



மண்ணில் பிறந்தது: 14-07-1973

மனங்களில் நிறைந்தது; 09-07-1992

## வீரவேங்கை குமாரவேல்

[சிவப்பிரகாசம் பிரமசீலன் (குட்டி)]

(இயக்கச்சியில் நேரடி மோதலில் வீரச்சாவு அடைந்தார்.)

வீரவிடுதலை வேண்டி நின்றாய்
வீழ்ந்த இடத்திலும் வேகம் கொண்டாய்
ஆர நீ நேசித்த ஈழ மண் மீண்டிடும்
அங்கு உந்தன் வீரகாவியம் ஒலித்திடும்.
உந்தன் நெஞ்சு சுமந்த கனவினை
எங்கள் மனதில் ஏற்றி நடக்கிறோம்
உன் இலட்சியத் தடங்களில் நாம்
தமிழீழ தேசத்தை மீட்டிடுவோம்.

நீலியம்பனை ஒழுங்கை, மல்லாகம். — சகோதரர், - குடும்பத்தினர்.

(சி 4920)

---

குடும்பத்தினர்

[சி/4923]

---

# நினைவு கூருகின்றோம்...
# 1992 - 08 - 22

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட வேலணை மேற்கைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1989 ஆம் ஆண்டு மட்டக்களப்பு வட்டமடுப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**ரவி** (பொன்னையா விஜயராஜ் - சரஸ்வதி வித்தியாலய வீதி, தம்பிலுவில்-1, அம்பாறை)

திருக்கோணமலை மேன்காமம் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**கப்டன் நடேஸ்** (இ. திலகரத்தினம் - தம்பலகமம், திருக்கோணமலை)

**மீசை ராஜா** (குழந்தைவேல் ராஜா - கிளிவெட்டி, திருக்கோணமலை)

1990 ஆம் ஆண்டு மாங்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**சசியன்** (ஜோண் அந்தோனிப்பிள்ளை - குமுழமுனை, மணலாறு)

ஊர்காவற்றுறையில் உலங்குவானூர்திகள் மூலம் தரை இறக்கப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

**லெப். சாந்தன்** (சின்னத்துரை சிவலிங்கம் - புங்குடுதீவு)

**நிசாந்தன்** (சுப்பிரமணியம் மாணிக்கம் - 3-ம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கு)

மாவிட்டபுரத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**சேனாதி** (செல்லக்கண்டு ஜெயச்சந்திரன்- சிறுப்பிட்டி தெற்கு, நீர்வேலி)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின்போது படுகொலை செய்யப்பட்ட செங்கலடியைச் சேர்ந்த கூலித் தொழிலாளி-மற்றும் ஆறுமுகத்தான் குடியிருப்பு வாசி ஆகிய 2 தமிழர்கள்.

பூநகரி, சங்குப்பிட்டி, கேரதீவு ஆகிய பகுதிகளில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்குவானூர்தித் தாக்குதல்களில் கொல்லப்பட்ட இளைஞர்கள் உட்பட 13 தமிழர்கள்.

வவுனியாவிலிருந்து வந்துகொண்டிருந்த வாகனம் ஒன்றின் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதல்களில் கொல்லப்பட்ட 4 தமிழர்கள்.

காரைநகரில் தரை இறக்கப்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் பருத்தியடைப்பு, பாலாவோடை, சாரதிபுரம் பகுதிகளில் மேற்கொண்ட அட்டூழியங்களின் போது, படுகொலை செய்யப்பட்ட, மற்றும் அரைகுறையாக எரிந்த நிலையில் சடலங்களாக மீட்கப்பட்ட யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவி, அவரதுபேரன், பேர்த்தி ஆகியோர் உட்படபல தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது விழுப்புண் அடைந்திருந்து சிகிச்சையின்போது வீரச்சாவெய்திய -

புலிகளின் குரல் வானொலி தொழில்நுட்பவியலாளர் -

**அமலன்** (தம்பிராசா சிவகணேசன் - பாலையூற்று, திருக்கோணமலை)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

## தமிழீழ விடுதலைப் புலிகள்

[சி/4927]

### சிந்தனைக்கு

அபாயம் எதுவுமின்றி, மகத்தானது எதுவும் எப்பொழுதும் சாதிக்கப்படுவதில்லை.

- நிக்காலோ மாக்கியாவெல்லி


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 22- 08- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05


## படுகொலைக்கான படையெடுப்பு

யாழ். குடா நாட்டைக் கைப்பற்றுவதற்கான பாரிய இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இத் தாக்குதலுக்கென பல்லாயிரக் கணக்கான இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளதோடு, நவீன ரக டாங்கிகளும், போர்த் தளபாடங்களும் இத்தாக்குதலில் பயன்படுத்தப்படுவதாகவும் தெரிய வருகின்றது.

தாக்குதல் ஆரம்பிக்கப்பட்ட முதல் நாளிலேயே பல பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது சொத்துடைமைகளை இழந்து அகதிகளாக வெளியேறிக்கொண்டிருக்கின்றனர்.

யாழ். குடா நாட்டின் மீது பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்று எடுக்கப்படும் பட்சத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கொல்லப்படவோ, அன்றி படுகாயம் அடையவோ வேண்டிவரும் என்பதும் லட்சக் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக வேண்டிவரும் என்பதும் சிறிலங்கா அரசாங்கத்திற்குத் தெரியாத விடயம் ஒன்றல்ல. இது குறித்து சிறிலங்கா அரசாங்கத்திற்குப் பல உள்நாட்டு, வெளிநாட்டு மனிதநேய ஸ்தாபனங்களும், அரச, அரசசார்பற்ற நிவாரண அமைப்புக்களும் முன்னரே தெரிவித்துமுள்ளன.

ஆனால் இது குறித்து சிறிலங்கா அரசாங்கமும், இராணுவமும் எதுவித அக்கறையும் காட்டவில்லை. தமிழ்மக்களை இராணுவ ரீதியாக வெற்றிகொள்ளுதல் என்பதே இராணுவத்தின் ஒரே இலட்சியமாக உள்ளது. இதைத் தொடர்ந்தே இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்குக் கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களும் கோடரிக் காம்புகள் போன்று சிங்கள இராணுவத்தின் இன அழிப்பிற்கு 'வழிகாட்டிகளாக' உள்ளன.

இதேவேளை யாழ்ப்பாணக் குடாநாட்டை முற்று முழுமையாக இராணுவத்தின் கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவதோ அன்றி தமிழ்மக்களை இராணுவரீதியாக வெற்றிகொள்வதோ என்றும்சாத்தியப்பாடானதொன்றாக இருக்கப்போவதில்லை.

## வேற்று மொழியில் கடிதம் கல்விப்பணிப்பாளர் மீது கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்விப்பணிப்பாளரும், கல்வித் திணைக்களமும் தமிழில் கடிதத் தொடர்புகளை வைத்துக் கொள்ளாமல் வேறுமொழிகளில்கடிதங்களை அனுப்புவதை வன்மையாகக் கண்டித்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர், தமது ஆட்சேபத்தைத் தெரிவிக்கும் பொருட்டு கல்விப்பணிப்பாளரால் தமக்கு வேறு மொழியில் அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தை பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கத்திற்கே திரும்பவும் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பாக அவருக்கு அனுப்பிய கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

★ இது போன்ற தவறுகள் பல தடவைகளில் ஏற்கனவே சுட்டிக்காட்டப்பட்டுள்ள போதும்பணிப்பாளரும், யாழ். கல்வித் திணைக்களமும் தமிழ் மொழி அமுலாக்கலை தொடர்ந்து புறக்கணிப்பதும் அலட்சியப்படுத்துவதும் மிகவும் வேதனைக்குரியதும், வன்மையாகக்கண்டிக்கப்படவேண்டியதுமாகும்.

★ தமிழ்மொழிக்கு பெருமையூட்டும் யாழ். மாவட்டத்திலேயே தமிழ்மொழி இவ்வளவு தூரம் புறக்கணிக்கப்படுள்ளமை பொறுக்கமுடியாததும் மன்னிக்கமுடியாததும் ஆகும்.

★ இச் செயல் அரச கரும மொழிக் கொள்கைக்கு முற்றிலும் முரணானது.

★ தமிழ் மொழியில் பணிப்பாளருக்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கு. பணிப்பாளர் வேறு மொழியில் கடிதமனுப்புவது தொடர்வதை ஆட்சேபிக்கு முகமாகவே கடிதம் திருப்பி அனுப்பப்படுகின்றது. பணிப்பாளர் தமிழில் அக்கடிதத்தை அனுப்பிய பின்னர் அதற்காக பதிலை சங்கம் அனுப்பி வைக்கும் எனவும் இ.த ஆ. சங்கத்தின் பொதுச் செயலாளர் குறிப்பிட்டு பதிலனுப்பியுள்ளார்.

முல்லைத்தீவு பகுதியில்

## இடம் பெயர்ந்த மக்களுக்கு 450 வீடுகள் வழங்கப்பட்டன

இராணுவ நடவடிக்கை காரணமாகமுல்லைத்தீவுமாவட்டத்தில் இருந்து இடம் பெயர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தின் வெவ்வேறு பகுதிகளிலும் தங்கி இருந்த மக்களுக்கென தமிழீழ விடுதலைப் புலிகளின் சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சுமார் 450 வீடுகள் அமைக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்த வீடுகள் யாவும் மாத்தளன், இடைக்காடு, அம்பலவளன், பொக்கணை, வலையர் மடம், பனையடி, முள்ளிவாய்க்கால், இரணைப் பாலை, புதுக்குடியிருப்பு, கெருடமடு, ஒட்டிசுட்டான் ஆகிய பகுதிகளிலேயே அமைக்கப்பட்டு மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்த வீடமைப்புத் திட்டத்தின் கீழ் சமூக பொருளாதார வளர்ச்சித் திட்டத்தினால் ஏற்கனவே 1991 இல் 1800 வீடுகள் தென்தமிழீழத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## அரசாங்கத்திற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

எதிரணிக் கட்சிகளால் அரசாங்கத்திற்கு எதிராக கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் நேற்று வெள்ளிக்கிழமை பாராளுமன்றத்தில் நடை பெற்றது.

பாராளுமன்றக் கட்டடத்தில் கடந்த திங்கள் நண்பகல் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் மகாநாட்டிலேயே இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

### 20 இராணுவத்தினர் மீது விசாரணை

(கொழும்பு)

கொக்கட்டிச்சோலை சம்பவம் தொடர்பாக சிறிலங்கா இராணுவத்தைச் சேர்ந்த இருபது பேர் மீது விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன என்று கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த விசாரணைகள் ஆயுதப்படை நீதிமன்றத்தில் தான் நடைபெறுகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வருடாந்தம்

## நூறுகோடி ரூபா நட்டத்தில் பெற்றோலிய கூட். தாபனம்

(கொழும்பு)

பெற்றோலியகூட்டுத்தாபனத்துக்கு வருடமொன்றுக்கு நூறு கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படுகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ரூபாவின்மதிப்புக்குறைவின் விளைவாக இலங்கை பெற்றோலிய கூட்டுத் தாபனம் டீசல் மண்ணெண்ணெய் விற்பனைகளின் மூலம் வருடம் தோறும் நூறு கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## தும்பன்கேணி மக்கள் நீரின்றி அவதி

(அம்பாறை)

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான் கரைப் பிரதேசமான தும்பன் கேணிப் பிரதேச மக்களுக்கு கல்லோய இடதுகை வாய்க்கால் மூலம் வழங்கப்படும் நீரை வழங்காததினால் அப்பிரதேச மக்கள் நீரின்றிப் பெரிதும் கஷ்டமுறுவதாகத் தெரியவருகிறது.

தும்பன் கேணியிலும் அதனை அண்டியுள்ள சுரவணையடியூற்று காந்திபுரம் களுமுந்தன் வெளி, திக்கோடை ஆகிய கிராமங்களில் வாழும் ஆயிரக்கணக்கான மக்கள் கடந்த சில வருடங்களுக்கு முன்பு கல்லோயா இடதுகை வாய்க்கால் மூலம் திறந்து விடப்படும் நீரின் மூலம் நெல் வயல்களில் நெற் செய்கையை மேற்கொண்டதுடன் அன்றாட தேவைகளுக்கும் இந் நீரையே நம்பி இருந்தனர்.

ஆனால் தற்போது கிழக்கில் யுத்தம் நிலவுவதாகக் காரணம் காட்டி வாய்க்காலில் இருந்து நீர் திறந்துவிடப் படாததினால் அதன் மூலம் ஊற்றெடுக்கும் கிணறுகள் யாவும் வரண்டு போயுள்ளன. இதனால் குடிப்பதற்குக் கூட நீரின்றி மக்கள் தவிக்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இம்மக்கள் இந்நிலையினால் கால்நடையாகவும் சைக்கிள்களிலும் குடங்களை எடுத்து நீர் இருக்கும் இடங்களை நோக்கி அலைந்து திரிவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன

## லெப். சீலன் நினைவாக முல்லையில் கூட்டம்

(முல்லைத்தீவு)

லெப். சீலன் அவர்களின் ஒன்பதாவது ஆண்டு நினைவைக் குறிக்கும் முகமாகவும், சீலன் படையணியினரால் ஆனையிறவில் 1991 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் மரபுவழிப் படையணியாக ஆகாய கடல்வெளி இராணுவ நடவடிக்கையில் இலங்கை இராணுவத்தை தடுத்து போரிட்டு மடிந்த 576 வீரவேங்கைகளினை நினைவு கூருமுகமாகவும் இடம்பெயர்ந்த தென் தமிழீழ மக்களால் முல்லைத்தீவு மாவட்ட மூங்கிலாறு பகுதியில் கடந்த பதினைந்தாம் திகதி அன்று ஆனந்த கலையரங்கில் நினைவு தின விழா நடைபெற்றது.

இவ் நினைவுவிழா நிகழ்ச்சியில் விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள், அத்துடன் கிராம சேவை உத்தியோகஸ்தர்கள், செஞ்சிலுவைச் சங்க உறுப்பினர்கள், முல்லை இடம் பெயர்ந்த நலன் புரிச் சங்க தலைவர் ஆகியோரும் இந் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

இவ் விழாவிலே சீலனின் 9 ஆவது ஆண்டு நினைவாக தென்தமிழீழ மக்களால் நடாத்தப்பட்ட பொது அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

## வடமராட்சிப் பகுதிகளில் திருமணப்பதிவுக்கு1000ரூபா

(கரவெட்டி)

அண்மைக்காலமாக வடமராட்சியின் பல்வேறு பகுதிகளிலும், திருமணப்பதிவின்றி வாழ்ந்து கொண்டிருக்கும் பல தம்பதியினருக்கு, திருமணப்பதிவு நடாத்தி வைக்கப்படுகின்றது. சனசமூக நிலைய சமாசங்களின் ஏற்பாட்டின் பேரில் உள்ளூராட்சித் திணைக்களத்தினால் இத்திருமணப் பதிவுகள், நடாத்திவைக்கப்படுகின்றன.

மேற்படி திருமணப்பதிவை மேற்கொள்ள முன்வரும் ஒவ்வொரு தம்பதியினருக்கும் தலா ஆயிரம் ரூபா உள்ளூராட்சித் திணைக்களத்தினால் வழங்கப்படுகின்றது. இதில் 500 ரூபாய் திருமணப் பதிவு உத்தியோகத்தருக்கு வழங்கவும், மீதி திருமணச் செலவுகளிற்கும் பயன்படுத்தப்படுகின்றது.

இதுவரை திருமணப் பதிவு நிகழாது வாழ்ந்துவரும் தம்பதிகள் தமது பகுதி சனசமூக நிலைய நிர்வாகிகளிடம் தம்மை இனங்காட்டிக் கொள்வதன் மூலம், அவர்கள் சட்டபூர்வமான தம்பதிகளாகி பல நன்மைகளைப் பெற வழி ஏற்படும் எனவும் திரு. வேலாயுதபிள்ளை தெரிவித்தார். (06)

## மாணவன் கைது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு இராணுவப் பிரிவுத் தலைவரின் சகோதரன் ஒருவர் நீர்கொழும்புப் பொலிசாரால் கடந்த செவ்வாய் கைது செய்யப்பட்டுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர் நீர்கொழும்பு வீடொன்றில் மாணவனாக இருந்தார் என்றும் பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## பங்களாதேஷ் பொலிசாரால் 12,000 பேர் கைது

(டாக்கா)

யதை அடுத்து பிரதமர் ஸியா

## இலங்கை இந்திய ஒப்பந்தம் இன்னும் செல்லுபடியாகும்

இராணுவரீதியாக வெற்றிகொள்வதோ என்றுமசாத்தியப்பாடானதொன்றாக இருக்கப்போவதில்லை. கடந்த கால, நிகழ்கால அனுபவங்களே இதைப் புகட்டக் கூடியவை ஆகும். இதனால் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண்பதென்பது பிரச்சினையை மேலும் மேலும் சிக்கலாக்குமே ஒழிய ஒருபோதும் தீர்விற்கு வழிசமைத்து விடமாட்டாது.

தமிழ்மக்கள் இதுவரை பல படையெடுப்புக்களைச் சந்தித்தவர்கள். பெரும் இராணுவ இன்னல்களுக்கும் இலக்கானவர்கள். யாழ்ப்பாணக் குடாநாட்டில்மட்டும் சுமார் 35,000த்திற்கு மேற்பட்ட இந்திய இராணுவத்தினருக்கு இடையிலும்வாழ்க்கை நடத்தியவர்கள். ஆனால் அவர்கள் அப்பொழுதும் தமது விடுதலை உணர்வை இழக்கவில்லை. மனஉறுதியில் தளரவில்லை. தனித்து நின்று போராடியவர்கள். அன்று இந்திய இராணுவத்துடன் வந்த உலகப் புகழ்பெற்ற ரி-72 ரஷ்யத் தயாரிப்பு டாங்கிகளுக்கு முன்னால் மனம் தளராது நின்றவர்கள். இன்று ரி-85 சீனத் தயாரிப்பு டாங்கிகளின் முன் மண்டியிட்டு விட மாட்டார்கள்.

இன்றும் தென்தமிழீழத்தில் ராணுவமும், சிங்கள, முஸ்லிம் ஊர்காவற் படையினரும் இழைத்த, இழைத்துவரும் படுகொலைகள், சித்திரவதைகள் மத்தியிலும் தமிழ் மக்கள் தமது விடுதலை உணர்வை இழக்கவில்லை. போராட்டங்களைக் கைவிடவில்லை. அவர்களை அடக்குமுறையால் சிங்கள இராணுவத்தால் வெற்றி கொள்ளமுடியவில்லை. இது சிங்கள இராணுவத்திற்கு அனுபவம் கொடுத்துள்ள பாடமாகும்,

ஆனால் சிறிலங்கா இராணுவம் மேற்கொள்ளும் கண்மூடித்தனமான தாக்குதலானது இனப்படுகொலையை நோக்கமாகக் கொண்டது. புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற ரீதியில் எவ்வளவு தமிழ்மக்களைக் கொன்றொழிக்க முடியுமோ அவ்வளவு தமிழ் மக்களைக் கொன்றொழிக்கும் நோக்கம் கொண்டது. ஆகையினால் யுத்தகாலத்தில் மக்கள் விழிப்புடனும், அவதானத்துடனும் செயற்பட வேண்டும். பதற்றமடையாது சிந்தித்து செயலாற்றவேண்டும். அத்தோடு மக்கள்போராட்டத்தில் எவ்வளவிற்கு எவ்வளவு பங்குகொள்கின்றார்களோ அந்தளவிற்கு தம்மையும், தம் இனத்தையும் அழிப்பிலிருந்து பாதுகாக்க முடியும் என்பதையும் புரிந்துகொள்ள வேண்டும்.

(டாக்கா)

பங்களாதேஷில் குற்றச் செயல்களை ஒழிக்கும் வகையில் கடந்த இரு வாரங்களில் 12,000க்கு மேற்பட்டோரை பொலிசார் கைது செய்திருக்கிறார்கள்.

கொலைகாரர்கள், கார்த் திருடர்கள், கப்பம் கோருபவர்கள், பிள்ளை கடத்துபவர்கள் ஆகியோர் இவர்களில் அடங்குவர். குற்றங்களைத் தடுக்கத் தவறிவிட்டதால் அரசாங்கம் ராஜினாமா செய்யவேண்டுமென எதிர்க்கட்சிகள் கோரியதை அடுத்து பிரதமர் ஸியா குற்றச்செயல்களில் ஈடுபடுவோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு கடந்த முதலாம்திகதி உத்தரவிட்டார்

இதுவரை பொலிசார் 650 சட்டவிரோத துப்பாக்கிகளை கைப்பற்றியிருக்கிறார்கள். கைது செய்யப்பட்டவர்கள் மீது குற்றச்சாட்டுக்கள் கொண்டுவருவதற்கு முன் நான்கு மாதங்கள்வரை அவர்கள் காவலில் வைக்கப்படுவார்கள்,

## வெளிநாட்டு தூதரங்கள் காபூலில் மூடிவிட முடிவு

(காபூல்)

ஆப்கானிஸ்தானின் தலைநகரான காபுல் மீது கடுமையான எறிகணைத் தாக்குதல் நடந்துள்ளது.

ஐரோப்பிய நாட்டு அரசுகள் தமது தூதராலயங்களை மூடிக்கொண்டு வெளியேறத் திட்டமிட்டுள்ளன

வெளிநாட்டுத் தூதுவர்கள் இன்னும் அங்கிருக்கும் ஐ நா அதிகாரிகள் முதலானோரும் பாதுகாப்பாக வெளியில் கொண்டுவருவதற்காக போரிடும் பல்வேறு குழுக்களுடன் பேச்சுவார்த்தைகள் நடப்பதாகக் தெரிவிக்கப்படுகிறது

ஹெஸ்மி இஸ்லாமிய குழுவுக்கு ஆயுதம் வழங்குவதாக வந்த செய்திகளை மறுத்துப் பாகிஸ்தான் அரசு தான் அவ்வாறு செய்யவில்லை என மறுத்துள்ளது

## ஈராக்கின் தென்பகுதியில் வான்பாதுகாப்பு வலயம்

### -அமெரிக்கா அறிவிப்பு

(லண்டன்)

ஈராக் மீது இராணுவத் தாக்குதல் ஒன்றை நடத்துவதில் அமெரிக்காவும், பிரிட்டனும், பிரான்சும் முனைப்பாக உள்ளன. இதற்காகதான்போர்விமானங்களை அனுப்பத் தயாராகவிருப்பதாகப் பிரித்தானிய பிரதமர் ஜோன் மேஜர் அறிவித்துள்ளார்.

இத்தகையஇராணுவத்தாக்குதலில் தானும் ஈடுபடவுள்ளதாகப் பிரான்ஸ் உறுதியளித்திருக்கிறது.

ஈராக்கின் தென்பகுதியில் வான் பாதுகாப்பு வலயம் ஒன்றை அமைப்பதென்றும், இதன் மூலம் சியா முஸ்லிம்களைக் காப்பதென்றும், இந்தப் பாதுகாப்பு வான்வலயத்தை ஈராக் பாதுகாப்புப் படைகள் மீறினால் உடனடியாக ஈராக் மீது தாக்குதல் நடத்துவது என்று மூன்று நாடுகளும் கூட்டாக அறிவித்துள்ளன.

இது தொடர்பாக ஐ. நா பாதுகாப்புச் சபையை இந்த நாடுகள் கலந்தாலோசிக்காது எனத் தெரிவிக்கப்படுகிறது. இது ஈராக்கைச் சண்டைக்கு இழுக்கும் முயற்சியென ஈராக் கண்டித்துள்ளது

## தூத்துக்குடியில் வெடிகுண்டு தயாரித்த 12 பேர் கைது

தூத்துக்குடிப் பகுதியில் நாட்டு வெடி குண்டுகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டிருந்த பன்னிரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறப்பு பொலிஸ் குழுவினர் இவர்களிடமிருந்து கந்தகம், பொட்டாசியம் குளோரைட்' இரும்பு, கண்ணாடித் துண்டுகள், வெள்ளைக்கற்கள், சணல் கயிறு போன்ற வெடி குண்டு தயாரிப்பிற்கு பயன்படுத்தும் பொருள்களைக் கைப்பற்றியுள்ளனர்.

### ஒத்திவைப்பு

இந்தியப் பாராளுமன்றத்தின் லோக்சபா, மற்றும்ராஜ்ய சபா ஆகியவற்றின் குளிர்காலக் கூட்டத்தொடர் நேற்று முன்தினம் மறு திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## இன்னும் செல்லுபடியாகும்

### -ஐ. கே. குஜ்ரால்

(டி.ல்லி)

1987ஆம் ஆண்டு இலங்கையில் கைச்சாத்திடப்பட்ட இலங்கை - இந்திய உடன்படிக்கை இன்னமும் செல்லுபடியானது என்றும், இன்னமும் அமுலில் உள்ளது என்றும் இந்தியாவின் முன்னாள் வெளியுறவுத்துறை அமைச்சர் ஐ. கே. குஜ்ரால் தெரிவித்தார்.

இந்தியாவின் லப்பாடு குறித்துக் கருத்துத் தெரிவித்த ஐ. கே. குஜ்ரால் இதனைத் தெரிவித்தார்

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் எவரையாவது குழப்பும் எந்தவொரு விடயத்தையும் இருநாடுகளுக்கும் இடையேயான நட்பு ரீதியான பேச்சுவார்த்தைகள் மூலம் நீக்கமுடியும் என்றும் ஐ. கே. குஜ்ரால் தெரிவித்தார்.

இவர், இந்திய வெளிநாட்டமைச்சில் குறுகிய காலம் பதவி வகித்தபோது இலங்கையின் வடக்குக் கிழக்கில் நிலைகொண்டிருந்த இந்தியப் படையைத் திருப்பிப் பெறுவதற்குப் பெரும் பங்கெடுத்துக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### ஷியா முஸ்லிம்கள் புகார்களை

## விசாரிக்க வருமாறு ஐ.நா.விற்கு ஈராக் அழைப்பு

(பக்தாத்)

ஈராக்கில் ஷியா முஸ்லிம்கள் தொடர்ந்து துன்புறுத்தப்படுவதாக கூறப்படும் புகார்கள் பற்றி விசாரிக்க ஐ நா தனது விசேட தூதுவர்களை அனுப்பலாம் என்று ஈராக் அழைப்பு விடுத்துள்ளது.

ஈராக்கின் வான் பரப்பில் அமெரிக்கா தொடர்ந்து அத்து மீறல் செய்து வருவதாகக் கூறியிருக்கும் கடிதமொன்றை ஐ. நா. தலைமைச் செயளாலருக்கு அனுப்பியுள்ள ஈராக், அக்கடிதத்தில் இந்த அழைப்பையும் தெரிவித்துள்ளது.

ஈராக்கின்அழைப்புபற்றிகருத்து வெளியிட்ட ஐ. நா தலைமைச் செயலாளர் பூட்டர்ஸ் பூட்டர்ஸ் காலி ஈராக்கில் ஐ நா காவலர்களும், மனிதாபிமான பணியாளர்களும் தங்கியிருக்க அனுமதிக்கப்படுவார்களேயானால் இந்த அழைப்பை ஐ நா நிராகரிக்காது என்றும் குறிப்பிட்டார்

இதே வேளை ஈராக்கின் தென் பகுதியில் வான் பாதுகாப்பு எல்லை ஒன்றை வகுப்பது பற்றி அமெரிக்காவும் பிரிட்டனும் ஆலோசனை நடத்தி வருகின்றன. ஈராக்கிற்கு எப்போது இறுதி எச்சரிக்கை விடுப்பது என்பது பற்றி திட்டம் தீட்டப்படுவதாக பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் டக்ளஸ் ஹேர்ட் கூறியுள்ளார்

## பொஸ்னியாவில் தாக்குதல்; ஐ.நா.பாசறை எரிந்தது

மோட்டார் பீரங்கிகளின் தாக்குதலால் பொஸ்னியாப் பாராளுமன்றக் கட்டடமும் நானூறுக்கு மேற்பட்ட உக்ரைன் மக்கள் தங்கியிருந்த ஐ. நா. பாதுகாப்பு படையின் பாசறையும் எரிந்து நாசமாகின. எனினும் இத் தாக்குதலில் இறந்தவர்கள் பற்றித் தெரியவரவில்லை இதே வேளை நேற்று முன் தினம் பகலில் நடந்த துப்பாக்கிச் சண்டையில் ஐ.நா. அமைதிப் படையின் உக்ரைன் வீரர் ஒருவர்கொல்லப்பட்டுள்ளார்.

அத்துடன் நேற்று முன் தினமிரவு முதல் சரயேவோ நகர் மீண்டும் மோட்டார் குண்டுகளாலும் எரிகுண்டுகளாலும் தாக்கப்பட்டதாக பொஸ்னியா சர்சேகொவியாவிலிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன. கடந்த சில நாட்களில் நடந்த உக்கிரமான தாக்குதல் இதுதான் என்று அச்செய்திகள் மேலும் கூறுகின்றன.

ஈழநாதம்

# நீதியை நிலைநாட்ட போரிடும் புலிகளே இறுதியில் வெல்வர்

## -நூல் வெளியீட்டு விழாவில் பிரதமகுரு உரை

(குருநகர்)

''நீதியை இம் மண்ணில் நிலைநாட்ட நீதியின் பக்கம் நின்று விடுதலைப் புலிகள் தர்ம யுத்தமொன்றை நடத்திக் கொண்டிருக்கிறார்கள் இந்த யுத்தத்தில் விடுதலைப் புலிகளே வெற்றியையும் அடைவார்கள்.''

அளவெட்டி தெற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரதநாராயணர் தேவஸ்தானத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற அருட்கவி சீ.விநாசித்தம்பிப் புலவரின் ''கீதோபதேசம்'' நூல் வெளியீட்டின் போது நூலை வெளியீட்டு வைத்துப் பேசிய தேவஸ்தான பிரதமகுரு கலாநிதி வீரசைவ சிவத்திரு கி. உருத்திரபுரேஸ்வரக் குருக்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடந்து பேசுகையில் கூறியதாவது, தர்மம் அழிந்து அதர்மம் மேலெழுகிற பொழுது என்னை நான் பிறப்பித்துக் கொள்கிறேன் என்பது கீதையில் கிருஷ்ண பரமாத்மாவின் வாக்காகும் பாண்டவர்களாகிய குறைந்த எண்ணிக்கையானவர்களின் பக்கம் நின்று தர்மத்திற்கான யுத்தத்தை நடத்தியவர் கண்ணன்.

இன்று எமது மண்ணில் அந்நியரான சிங்களக் கூலிப்படையினர் நடத்திக்கொண்டிருக்கும் அதர்மப் போருக்கு எதிராகக் கண்ணன் போராளிகளின் பக்கம் நின்று எமது விடுதலைப் போராளிகளுக்கு வெற்றிவாகை பெற்றுத்தரவே இந்தக் கிருஷ்ணண ஜெயந்தி தினத்தில் அவர் கோவில் கொண்டிருக்கும் பகுதிகளில் யுத்தம் முடிக்கி விடப்பட்டிருக்கும் போதும் தேரோடிக் காட்சி தந்திருக்கிறார், இவ்வாறு அவர் தெரிவித்தார்.

''கீதோபதேசம்'' பிரதிகளை தேர்த்திருவிழா தினமான நேற்று (21-8-92) அடியார்கள் பெருமளவில் பெற்றுச் சென்றது குறிப்பிடத்தக்கதாகும் (21)

## களவுக்குச் சென்றவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கையை சாதகமாகப்பயன்படுத்தி களவெடுக்கச் சென்றவர் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கானார்.

நேற்று பண்டத்தரிப்புப் பகுதிகளில் இருந்து பெருளவு மக்கள் இடம் பெயர்ந்ததை அடுத்து அதைச் சாதகமாகப் பயன் படுத்தி வீடுகளில் களவெடுக்கச் சென்றவர் அப்பகுதியை அடுத்து நின்ற இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி படுகாயமடைந்ததாக தெரியவருகிறது. (பா)

# அ. தி. மு. க. அரசுக்கு மாற்றீடாக இந்திரா காங்கிரஸ் வளருகிறது

## - வாழப்பாடி ராமமூர்த்தி தெரிவிப்பு

[சென்னை]

தமிழக அரசியலில் இந்திரா காங்கிரஸ் கட்சிக்குத் திருப்புமுனை வாய்ந்திருக்கிறது தமிழகத்தில் ஆளும் அரசுக்குமாற்றாக இந்திரா காங்கிரஸ் வளர்ந்து கொண்டிருக்கிறது என்று வாழப்பாடிராமமூர்த்தி தெரிவித்தார்.

ஆகவே ஆகஸ்ட் புரட்சி பொன்விழா ஆண்டில் கட்சியை ஏழை எளிய மக்களின் கட்சியாக மாற்றப் பாடுபட வேண்டும் என்று தமிழ் நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடிராமமூர்த்திவேண்டுகோள் விடுத்தார். தமிழ் நாட்டில் மீளவும் காங்கிரஸ் ஆட்சி வர நம்மை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்றார் அவர்,

காங்கிரஸ் கட்சி தமிழ்நாட்டில் ஆட்சியிலிருந்து இருபத்தைந்து ஆண்டுகள் ஆகின்றன. ஊழல் இல்லாத தொழில் வாய்ப்புக்களை உருவாக்கிய தொழில் வளம் மிக்க ஆட்சியாக தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சி திகழ்ந்தது. காங்கிரஸ் அல்லாத அரசுகளின் 25 வருட கால ஆட்சிக்காலத்தில்வறுமை வேலையில்லாததிண்டாட்டம் அதிகரித்துள்ளன. தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சியை அமைக்க எம்மை அர்ப்பணித்துக்கொண்டு செயலாற்ற வேண்டும் என்றும், இதற்கு வழிநடத்திச்செல்ல சுதந்திரப் போராட்டத் தியாகிகள் முன்வர வேண்டும் என்று கூறினார் வாழப்பாடி ராமமூர்த்தி.

இந்தியாவிலிருந்து திரும்பும் அகதிகளுக்கென

# அவுஸ்திரேலியா அரசாங்கம் 2,50,000 நிதி உதவி

(சிட்னி)

இந்தியாவிலுள்ள இலங்கைத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்பும் முயற்சிகளுக்கு அவுஸ்திரேலியா உதவுமென்று அவுஸ்திரேலிய வர்த்தக வெளிநாட்டு அபிவிருத்தி அமைச்சர் ஜோன் கரையின் அண்மையில் கூறியுள்ளார்.

இலங்கை திரும்பும் அகதிகள் மீளக்குடியமர்த்தப் படுவதற்கு இலங்கை அரசுக்கு உதவும் பொருட்டு அவுஸ்திரேலியா அகதிகளுக்கான ஐ நா. உயர்ஸ்தானிகரக்கு இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் அவுஸ்திரேலியா டாலர்களை வழங்கியுள்ளது.

தாயகம் திரும்பும் அகதிகளுக்கான வரவேற்பு இடங்கள் அமைத்தல், அகதிகளுக்கான கல்வி, சுகாதாரம், இடப் பெயர்ச்சி போக்குவரத்து, போசாக்குணவு வழங்கல் என்பவற்றைக் கவனிப்பதற்காகவே இது வழங்கப்படுவதாக அவர் மேலும் கூறியுள்ளார்

## தோல்வி

சிறிலங்கா பாராளுமன்றத்தில் அரசாங்கத்திற்கு எதிராக எதிர்க்கட்சிகளால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் 60 பெரும்பான்மை வாக்குகளால் தோற்கடிக்கப் பட்டது

நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதாவராக 61 உறுப்பினர்களும் எதிராக 121 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

# தமிழர் உரிமை மாநாடு செப்டெம்பரில் நடைபெறும்

(சென்னை)

தமிழர் வாழ்வு உரிமை மாநாட்டை செப்டெம்பர் மாதம் சென்னையில் நடத்த பாட்டாளி மக்கள் கட்சி திட்டமிட்டுள்ளது இத்தகவலை முன்னாள் அமைச்சரும் பாட்டாளி மக்கள் கட்சி முக்கியஸ்தருமான பண்டுருட்டி ராமச்சந்திரன் தெரிவித்தார்.

தமிழர்களாகப் பிறந்தவர்கள் இலங்கையிலும், இந்தியாவின் வேறு மாநிலங்களிலும் வாழ முடியவில்லை. அவர்களுக்கு வாழ்வு கிடைக்க வேண்டும் என்று கோரி செப்டெம்பர் 10, 11, 12 ஆம் திகதிகளில் சென்னையில் தமிழர் வாழ்வு உரிமை மாநாட்டை பாட்டாளி மக்கள் கட்சி நடத்துகிறது என்று அவர் கூறினார்.

பாட்டாளி மக்கள் கட்சி நடாத்தும்

# தள்ளாடி விமானத்தளம் விரைவாக செயல்பட உதவும்

மன்னார் தள்ளாடி இராணுவ முகாமில் அமைக்கப்பட்டுள்ள விமானத்தளம் வடக்கு இராணுவ நடவடிக்கையில் விமானப்படையினர் விரைவாகச் செயற்பட உதவியாக இருக்கும் என கூட்டுப்படைத் தலைமை அலுவலக பேச்சாளர் கேணல் சரத் முனசிங்க தெரிவித்தார்.

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



| அங்கமம் | சங்கமம் |
| --- | --- |
| 14 | 02 |
| 07 | 09 |
| 28 | 91 |

## திருமதி யோகமணி - கந்தையா

காலம் ஒன்று கடந்தாலும் கண்ணீர் இன்னும் ஓயவில்லை
ஆண்டு பலதான் சென்றாலும் அன்னை உம்மை மறப்போமா
அறிவு சிறந்திருக்க அன்புள்ளம் நிறைந்திருக்க
பாசத்தைக் காட்டி பண்புடனே வளர்த்து விட்டீர்
கடமை தானிருக்க கண்ணியமாய் நாமிருக்க
வெற்றுயிருடன் நாமனைவரும் வீணாகி போயிருக்க
எமதருமை தாயே எமைவிட்டு எங்கு சென்றீர்?
அழுதழுது அணைத்திடுவீர் எம் அனைவருக்கும் அது அரவணைப்பு
அனைக்குமே நீரென்று நாமனைவரும் ஒன்றாயிருக்க

# மாவீரர் புகழுடல்கள் மக்கள் இறுதி அஞ்சலிக்கு

(யாழ்ப்பாணம்)

மாதகல் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோதல்களில் வீரச்சாவு அடைந்த வீரவேங்கை நேசன் (கார்த்திகேசு சிவநாதன், வரணி வடக்கு, மாசரி), வீரவேங்கை காந்தன் (வைரமுத்து சந்திரமோகன், 5-ம் குறிச்சி, ஏறாவூர், மட்டக்களப்பு) ஆகிய போரார்ளிகளின் புகழுடல்கள் இன்று மாலை 4மணிக்கு தென்மராட்சிக் கோட்டம், வரணி மகாவித்தியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்

இதேமோதல்களில் வீரச்சாவடைந்த 2-ம் லெப். அண்ணாநம்பி [கண்ணலிங்கம் கயிலைநாதன், மாவிட்டபுரம்], வீரவேங்கை அருள்தாசன் (ஜெனி கதிரைமலைநாதன் றூபதாஸ், சுன்னாகம், வடக்கு) ஆகிய போராளிகளின் புகழுடல்கள் இன்று மாலை 3 00 மணிக்கு வலிகாமம்கோட்டம் சுன்னாகம் மயிலணி மகாவித்தியாலயத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து அஞ்சலிக் கூட்டங்கள் நடாத்தப்பட்டு அவ்வக்கோட்ட மாவீரர் துயிலும் இல்லங்களில் புதைகுழிகளில் விதைக்கப்படும்.

## விமான

நண்பகலும் இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் ஐந்து குண்டுகளை வீசின இதன் போது இப்பகுதிகளில் இருந்த சில பொதுமக்களின் வீடுகள் பலத்த சேதமடைந்ததாகத் தெரியவருகிறது

இதே வேளை அளவெட்டி தெற்குப்பகுதியில் வீசிய குண்டு ஒன்று வீழ்ந்து வெடிக்காத நிலையில் விடுதலைப் புலிகளால்மீட்கப்பட்டுள்ளது

அத்துடன் சீ - பிளேன், உலங்கு வானூர்தி ஆகியன வானில் வட்டமிட்டு சில்லாலை, பண்டத்தரிப்பு, விளான் பகுதிகளில் கலிபர் தாக்குதல்களை மேற்கொண்டன. (தக) 9,11)

## சீன

ஏற்பட்டது.

இதேவேளை கடற்படைப் பீரங்கிப் படகுகளிலிருந்தும், இராணுவ நிலைகளிலிருந்தும் மாதகல்பகுதிமீது பலத்தபீரங்கித் தாக்கும், எறிகணை வீச்சும் இடம்பெற்றன. அத்துடன் விமானப்படை விமானங்களும், உலங்குவானூர்திகளும் குண்டுவீச்சுத்தாக்குதலி

## வதந்தியின்

அதனுடன்காசிப்பிள்ளைசோமசுந்தரம் (வயது 52) என்பவர் மாரடைப்பால் மரணமானார்.

இதேவேளை வதந்திகளைப் பரப்பினோர் என்ற சந்தேகத்தின் பேரில் மூவர் சுன்னாகம் தமிழீழ காவல்துறையினரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுக்தப்பட்டுள்ளதகத் தெரியவருகிறது.

(9), 11)

## நான்கு

யேசுதாஸ் (21 வயது) பண்டக்தரிப்பு, கே. குமரகுருவான் (24 வயது) மாதகல், ரி கேதீஸ் மாறன் (34 வயது) பண்டத்தரிப்பு ஆகியோர் யாழ்.

உ
சிவமயம்



ஆச்சாரியாபிஷேக அழைப்பிதழ்

சுவஸ்தி ஸ்ரீ நிகழும் ஆங்கிரஸ் வருடம் ஆவணி மீ 7-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை 23-8-92 காலை 8-05 மணி முதல் 9-30 மணி வரையுள்ள மிருகசீர்ஷ நட்சத்திரமும் தசமித் திதியும் சித்த யோகமும் கன்னிலக்னமும் கூடிய சுப முகூர்த்தத்தில்,

எமது புத்திரன்

அரவணைப்பு
அனைத்துமே நீரென்று நாமனைவரும் ஒன்றாயிருக்க
அழவைத்துப் போனீரே துயரம்தான் எமக்கு மிச்சம்
எங்கள் குல விளக்கு அது அணையாத சுடர் விளக்கு
வாழ்ந்திடும் சிறப்பைக் காண வாழ்ந்திடுவீர் என்றிருக்க
கனிந்திடும் வேளை தன்னில் காற்றாகிப் போனீரே
உடலால் மட்டும் பிரிந்தீர்கள் உள்ளத்தால் பிறக்கின்றீரே
ஆறாத்துயரமது அன்புமலர்தூவி துதிக்கின்றோம்
நீங்காத உங்கள் திருமுகத்தை நெஞ்சில் இருத்தி
பூசிக்கின்றோம்

சேர் பொன் இராமனாதன் வீதி,
கலட்டி,
யாழ்ப்பாணம்.

கணவன், பிள்ளைகள்
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்,
அனைவரும் (சி/4928)

---

# 45 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலி



வீரஜனனம்
05 — 10 — 1971

வீரச்சாவு
09 — 07 — 1992

## வீரவேங்கை நகைமுகன்
[அருணகிரி சற்குணராஜா (கிச்சு)]

கட்டைக்காட்டு முனையின் எல்லைக் காவலன்
தொல்லை தந்த சிங்கள இராணுவத்தை
பல்லை உடைத்து பரகதி அனுப்ப
பரனில் பதுங்கி பாசறை அழிப்பில்
மாவீரனான வீரவேங்கை கிச்சு
மீண்டும் பிறப்பான் இம் மண்ணில்
அவனது நாற்பத்தைந்தாம் நாளில் கண்ணீரால் அஞ்சலி

வேலணை
5 ஆம் வட்டாரம்

தாய், சகோதரர்
தீவக மக்கள்
(3062)

---

தாக்குதல்களை மேற் கொண்டது. (ச,க) 9,11)

---

குடாநாட்டை-

இராணுவம் தொடர்ச்சியாக ஐந்து மணி நேரத்துள் நூற்றுக்கு மேற்பட்ட எறிகணைகளை ஏவின

இவை பண்டத்தரிப்பு, சில்லாலை, வடலியடைப்பு, மாதகல், அளவெட்டி பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன இதனால் இப்பகுதிகளில் இருந்த பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

இதேவேளை இவ் எறிகணைகள் வீழ்ந்து வெடித்த சத்தம் பத்துமைல்களுக்கு அப்பால் இருந்த வீடுகளின் யன்னல்களை அதிரவைத்ததாக பலர் தெரிவித்தனர். (ச, க)

---

பரீட்சை

பெற்றுக்கொள்ளவும்.

நாளை நடைபெறவுள்ள மேற்படிபரீட்சைக்குத்தோற்றவுள்ள மாணவர்களை புதிய பரீட்சை நிலையங்களுக்கு அழைத்துச் செல்வதற்கு அவ்வப் பாடசாலை அதிபர்களே பொறுப்பானவர்களென்று பிரதேசக் கல்விப்பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் அவர்கள் கேட்டுக்கொள்கின்றார்.

அத்துடன், மருதனார்மடம், கல்விக்கோட்டத்தின் பரீட்சை நிலையங்களான ஏழாலை மகா வித்தியாலயம், ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாலயத்திலும் அமைந்துள்ளபரீட்சை மண்டபங்கள் சுன்னாகம் மைலணி சைவ வித்தியாலயத்திற்கு மாற்றப்பட்டுள்ளதென்றும் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலும் யா/ அளவெட்டி அருணோதய கல்லூரியிலும், பண்டத்தரிப்பு இந்துமகளிர் கல்லூரியிலும் அமைக்கப்பட்டுள்ள க.பொ.த (உயர்தர)ப் பரீட்சை நிலையங்கள் யா/ மானிப்பாய் இந்துக்கல்லூரியில் 21-08-92 தொடக்கம் பரீட்சை முடிவடையும் தினம் வரையும் நடைபெறும் என்பதையும் அறியத்தருகின்றார்.

---

ணங்களும், உலங்குவானூர்திகளும் குண்டுவீச்சுத்தாக்குதலிலும், கலிபர்த் தாக்குதலிலும் ஈடுபட்டன.

இவ்வாறாக நடைபெற்ற கடும் சண்டையின் பின்னர் மாதகல் பகுதிக்குள் நுழைந்த இராணுவத்தினர், தற்பொழுது மாதகல் துறைமுகத்தடியிலும், மாதகல் காலாப்புலம் மருத்துவமனையிலும் நிலைகொண்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

---

இடம் பெயர்ந்த

பிரிவில் இராஜா பாடசாலை, சண்டிலிப்பாய் தேவாலயம், மானிப்பாய் மெமோறியல், மானிப்பாய் சென் அன்ரனீஸ், நிற்காமம், ஆனைக்கோட்டை மெதடிஸ்ற், மானிப்பாய் விவேகானந்தா, நவாலி அரசடி, களவோடை அம்மன் கோயில், நாகம்மா கோயில், சண்டிலிப்பாய் த. க. பாடசாலை, நவாலி இந்து த க பாடசாலை மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி ஆகிய இடங்களிலும், உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, உடுவில் ஆச்சிரமம், முருகமூர்த்தி கோயில், உடுவில் மான் பாடசாலை, பூவரராயர்தேவாலயம் போன்ற இடங்களிலும், தெல்லிப்பழை உதவிஅரசாங்க அதிபர் பிரிவில், மாகியப்பிட்டி சூசையப்பர் ஆலயம், செபஸ்ரியான்கோவில், காளிகோவில் ஆகிய இடங்களிலும் புதியதாக மக்கள் தங்குவதற்கு வசதிகள் செய்யப்பட்டிருப்பதாக யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

மகாபொல

மான பரிசில்கள் திறமையுள்ள மாணவர்களுக்கு வழங்கப்படும் என்றும், எஞ்சிய புலமைப் பரிசில்கள் திறமை. பெற்றோரின் வருமானம் ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

---

மாறன் (34 வயது) பண்டத்தரிப்பு ஆகியோர் யாழ். போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களைவிட மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார். (பா

---

நான்கு புலிகள்

அருள்தாசன் (ஜெனி - கதிரமலைநாதன் ரூபனதாஸ் சுன்னாகம் வடக்கு சுன்னாகம்) ஆகிய போராளிகளே வீரச்சாவு அடைந்தவர்களாவர்

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

---

பண்டத்தரிப்பு

கொழும்புப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. பண்டத்தரிப்புநகரைநோக்கிப் படையினர் முன்னேறுவதாகவும் அச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது

---

பல்லாயிரக்

கொண்டு சரைசாரையாக வெளியேறிய வண்ணமிருந்ததை அவதானிக்கமுடிந்தது.

பல்லாயிரக் கணக்கான வயோதிபர்களும் குழந்தைகளும் சிறுவர்களும், தாய்மார்கள் கைக்குழந்தைகளுடனும் தலையில் சிறிய சிறிய பொதிகளையும் தூக்கியவாறு கொளுத்தும் வெய்யிலில் பிரதான வீதியூடாக மானிப்பாய் ஆனைக்கோட்டை பகுதிகளை நோக்கி சென்றுகொண்டிருந்தனர்.

அவலப்பட்டு வந்துகொண்டிருந்த மக்களுக்கு இளைஞர்கள் சிலர் வீதிகளில் வைத்து தாகசாந்தி அளித்ததை அவதானிக்க முடிந்தது.

மானிப்பாய் மெமோறியல் கல்லூரி, அந்தோனியார் ஆலயம், மருதடி வினாயகர் கோவில், சுதுமலை அம்மன் கோவில், மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி, சென்ஆன்ஸ், உடுவில் மகளிர் கல்லூரி ஆகியவற்றில் எழுபத்தையாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் தங்கியுள்ளனர். (க), (ச)

---

எமது புத்திரன்

## பிரம்மஸ்ரீ ஜெயசங்கரசர்மா

(சிறுப்பிட்டி கண்ணன் சர்மா) அவர்களுக்கு
நிர்வாண தீக்ஷா ஆச்சாரியாபிஷேகம்

நிகழ்த்த கொழும்பு ஸ்ரீ சிவகாமி அம்பிகா சமேத ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் திருவருளை முன்னிட்டு மேற்படி தேவஸ்தான தர்மகர்த்தாக்களின் அனுசரணையுடன் ஆலய அக்ரகாரத்தில் தேவஸ்தான பிரதம சிவாச்சாரியார் பிரதிஷ்டா கலாநிதி சிவ ஸ்ரீ சி- குஞ்சிதபாதக் குருக்கள் அவர்களால் நடாத்தப்படும் இச் சுப வேளையில் அன்பர்கள் அனைவரும் வருகை தந்து விழாவினைச் சிறப்பித்து வைக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிறுப்பிட்டி

சுபம்

இங்ஙனம்
சு. இராமச்சந்திரசர்மா
தம்பதிகள்

(3052)

---

## தெய்வீக இசையரங்கு நிறுத்தம்

நல்லூர் முருகப்பெருமான் மகோற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீமுருகன் தண்ணீர்ப் பந்தல் நிர்வாகிகளால் நடத்தப்பட்டுவந்த தெய்வீக இசையரங்கு நிகழ்ச்சி - நாட்டின் தற்போதைய நிலைமை காரணமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்ச்சிகள் சிறப்புற நடைபெற உதவிய அனைவருக்கும் நிர்வாகம் தனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றது.

நிகழ்ச்சிகள் திறம்பட அமைய உதவிய ஈழநாதம், உதயன், ஈழநாடு, முரசொலி ஆகிய பத்திரிகைகளுக்கும் நிர்வாகம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

(ந. சின்னத்துரை)
விழாக்குழுவினர்

(3063)

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 21-08-1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 5331

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்

41-9652, 24-983, 26-3632, 26-3068, 26-3126, 27-1375, 26-7663, 26-6026, 27-8160, 42-1320, 27-2034, 26-2745, 28-4672, 24-9744, 24-5258

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.